## ரமஜ்தான் மாதத்தின் நோன்புகள்

ரமஜ்தான்மாத்தின்நோன்புகள்கடமையாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஏற்க மறுப்பது இறைமறுப்பாகும். இது இஸ்லாத்தின் கட்டாயக் கடமை யான வணக்கங்களில் ஒன்றாகும், அல்லாஹ் தஆலரா திருக்ஃகுர்ஆனில் கூறுகிறான்:

شَهۡرُ رَمَضَانَ ٱلَّذِىٓ أُنزِلَ فِيهِ ٱلۡقُرۡءَانُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنَٰتٍ مِّنَ ٱلۡهُدَىٰ وَٱلۡفُرۡقَانِۚ فَمَن

شَهِدَ مِنكُمُ ٱلشَّهۡرَ فَلۡيَصُمۡهُۖ ١٨٥ البقر 185| )

*பொருள்: ரமஜ்தான்மாதம் எத்தகையது என்றால் அம்மாதத்தில்தான் மனி தர்களுக்கு முழுமையான வழிடிகாட்டியாகவும், நேர்வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதாகவும், சத்தியத்தையும் அசத்தியதையும் பிரித் துக்காட்டக்கூடியதாகவும் உள்ள திருக்ஃகுர்ஆன் இறக்கியருளப்பட்டுள் ளது. எனவே, இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அம்மாதம் முழுவதும் நோன்பு நோற்கவேண்டும் (அல் பஃகரஹ்:185)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ صَامَ رَمَضَانَ، إِيمَانًا وَاحْتِسَابًا، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ

*பொருள்: எவர் ஒருவர் ஈமான் கொண்டுள்ள நிலையில் அல்லாஹ்விட மிருந்து பிரதிபலனை எதிர்ப்பார்த்து ரமஜ்தான் மாதத்தில் நோன்பு நோற் பார்களோ அவர்களுடைய முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப் பட்டுவிடும்* (புக்ஹாரி,முஸ்லிம்). மற்றொரு நபிமொழியில் கூறப்பட்டுள் ளது: ரமஜ்தான் மாதத்தில் முதல் இரவிலேயே கொடூர ஷைத்தான்களும் ஜின்களும் கைது செய்து அடைக்கப்பட்டுவிடுகின்றனர், நரகத்தின் வாயில் கள் மூடப்பட்டுவிடுகின்றன, அவற்றில் ஒரு கதவும்கூட திறக்கப்படுவ தில்லை, மற்றும் சுவர்க்கத்தின் வாயில்கள் அனைத்தும் திறக்கப்பட்டுவிடு கின்றன, அவற்றின் ஒரு வாயிலும்கூட மூடப்பட்டிருப்பதில்லை, அதன் பின் அழைப்பு கொடுப்பவர் ஒருவர் அழைப்பினைக்கொடுத்துக்கொண் டிருப்பார், நன்மையை நாடுபவர்களே முந்திக்கொள்ளுங்கள், தீமையின் புறம் செல்பவர்களே பின்வாங்கிக்கொள்ளுங்கள். மற்றும் அல்லாஹ் தஆலா ஒவ்வொரு இரவிலும் எண்ணற்ற மக்களை நரகத்திலிருந்து விடு தலை அளித்துவிடுகின்றான் (திர்மிதி, ஹாகிம்). இறைத்தூதர் ﷺ அவர்கள் ஷஃஅபான் மாதத்தின் இறுதி இரவில் தம் தோழர்களுக்கு அறிவுரை வழங்கும் வகையில் ரமஜ்தான் மாதத்தைப்பற்றிக் கூறினார்கள்:

وَهُوَ شَهْرٌ أَوَّلُهُ رَحْمَةٌ وَأَوْسَطُهُ مَغْفِرَةٌ وَآخِرُهُ عِتْقٌ مِنَ النَّارِ

www.uzaifalahi.com

*பொருள்:அது எப்படிப்பட்ட மாதம் என்றால், அதன் முதல் பகுதி அல்லாஹ்வின் கருணை பொழியக்கூடியதாவும், அதன் நடுப்பகுதி அல்லாஹ்வால் பாவமன்னிப்பு அளிக்கப்படும் காலமாகவும் அதன் இறுதிப்பகுதி நரகத்திலிருந்து விடுவிக்கப்படும் காலமாகவும் இருக்கின்றது.*(பைஹஃகி, இப்னு ஹிப்பான், இப்னு க்ஹுஜைமா). ரமஜ்தான் மாதத்தின் நோன்பு இஸ்லாத்தின் அடிப்படைகளில் ஒன்றாக இருக்கின்ற காரணத்தினால் ஒருவர் எவ்விதக் காரணமுமின்றி அதன் முக்கியத்துவத்தை அறிந்திருந்தும் அதனை விட்டு விடுவரேயானால் அல்லாஹ் தஆலா அவரிடம் மிகக் கடுமையாக கேள்வி கணக்கு கேட்பான். அதன்பின் அவர் ஆயுள் முழுவதும் அதற்குப் பதிலாக நோன்பு நோற்றாலும் இவ்வாறு செய்வது அவருக்கு எவ்வகையிலும் பயனளிக்காது, அது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

**நோன்பு எப்போது துவங்கவேண்டும்?**

ரமஜ்தான் மாதத்தின் பிறையைக் கண்டு ரமஜ்தான் மாதத்தின் நோன்பு துவங்கப்படுகின்றது. ரமஜ்தான் மாதத்தின் பிறை தென்படவில்லையென்றால் ஷாபான் மாதத்தின் முப்பதாம் நாள் கணக்கிடப்படும், அதன்பின் ரமஜ்தான் மாதத்தின் நோன்பு துவங்கப்படும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ تَصُومُوا حَتَّى تَرَوُا الْهِلَالَ، وَلاَ تُفْطِرُوا حَتَّى تَرَوْهُ، فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَاقْدُرُوا لَهُ

பொருள்: ரமஜ்தான் மாதத்தின் பிறையைக் காணாதவரை நோன்பைத் துவங்காதீர்கள், இதுபோன்றே, (அதனை முடித்துக்கொளவதற்கான) பிறையைக் காணாதவரை நோன்பை முடித்துக்கொள்ளாதீர்கள், மேகமூட்டம் இருக்குமானால், ஷாபான் மாதத்தை முப்பது நாட்களாக முடித்துக்கொள்ளுங்கள் (புக்ஹாரி, முஸ்லிம்). மற்றொரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

الشَّهْرُ تِسْعٌ وَعِشْرُونَ لَيْلَةً، فَلاَ تَصُومُوا حَتَّى تَرَوْهُ، فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَأَكْمِلُوا العِدَّةَ ثَلاَثِينَ

*பொருள்: ஒரு மாதம் என்பது இருபத்தொன்பது நாட்களாகவும் இருக்கும், ஆகவே, எதுவரையில் நீங்கள் பிறையைப் பார்க்கவில்லையோ அதுவரை நோன்பைத்துவங்காதீர்கள், மேகமூட்டம்இருக்குமானால், ஷாபான்மாதத்தை முப்பது நாட்களாக முடித்துக்கொள்ளுங்கள்*(புக்ஹாரி,முஸ்லிம்).

**நோன்பு யார் யார்மீது கடமையாகும்?**

வயது வந்த, அறிவாற்றலுடைய முஸ்லிமான ஒவ்வொரு ஆண் பெண் மீதும் அவர் நோன்பு நோற்கும் ஆற்றலைப்பெற்றுள்ளவராக இருந்தால்

www.ijzarfalahi.com

நோன்பு கட்டாயக் கடமையாகும். பெண்கள் மாதவிடாய் மற்றும் பிள்ளைப்பேறுகால இரத்தப்போக்கிலிருந்து தூய்மைப்பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

## சிறுவயதினருடைய நோன்பு

வயது வராத சிறுவர்கள்மீது நோன்பு கடமையல்ல, இருப்பினும், அவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் அவர்கள் நோன்பு நோற்கும் ஆற்றல் பெற்றிருந்தால் அவர்களை நோன்பு நோற்கும்படி ஊக்குவிக்கவேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு பழக்கம் ஏற்பட்டுவிடுவதோடு நோன்பின் கடுமையைப்பற்றியும் அவர்கள் தெரிந்துகொள்ள முடியும். இவ்வகையில், அவர்கள் வயதுக்கு வரும்போது அவர்களுக்கு நோன்பு நோற்பது கடினமானதாகத் தென்படாது. சிறுவர்கள் மீது நோன்பு கடமையில்லாதபோதிலும், அவர்கள் தைரியத்துடன் அதனை மேற்கொள்வார்களேயானால், அவர்களுக்கு அதற்கான பிரதிபலன் கட்டாயம் கிடைக்கும்.

* * *

www.uzairfalahi.com